பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 28 புதன்கிழமை 11.06.2025 கதிர் 214

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கும் ரெலோவுக்கும் இடையில் ஞாயிற்றுக் கிழமை நடந்தது. அது தொடர்பாக ரெலோவின் நிதிச் செயலாளர் சுரேன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ☞ 2

# மன்னாரில் இன்று போராட்டம்

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்றையதினம் இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு ஆதரவை வழங்குமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தி மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் செயல் திட்டமாக காணப்பட்டாலும், குறித்த காற்றாலைகள் அமைக்கப்படும் இடம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் மன்னார் தீவு மற்றும் பெருநில பரப்பிலும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ☞ 2

# 3 நாள் பயணமாக ஜேர்மன் சென்றார் அரசுத் தலைவர்

ஜேர்மன் அரசுத் தலைவர் பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரின் அழைப்பின் பேரில், அரசுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஜேர்மனிய கூட்டாட்சி குடியரசுக்கு 3 நாட்கள் உத்தியோகபூர்வ அரசமுறை பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணத்தின் போது, அரசுத் தலைவர் திசாநாயக்க, அரசாங்க முன்னுரிமைகளின் அடிப்படையிலான வர்த்தகம், டிஜிட்டல் பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகள் குறித்து ஜேர்மன் அரசுத் தலைவர், மத்திய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் ☞ 6

# கடும் காற்று, கடற்கொந்தளிப்பு தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த அறிவிப்பு இன்று பிற்பகல் 2:30 மணி வரை செல்லுபடியாகும் என்றும் அந்த அறிவிப்பில் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் சிலாபத்தில் இருந்து புத்தளம், மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பகுதிகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவநிலையின் தாக்கம் காரணமாக, சிலாபத்தில் இருந்து புத்தளம், மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பகுதிகளில் காற்றின் வேகமானது,

அவ்வப்போது மணிக்கு 60-70 கி.மீ. வரை அதிகரிக்கக்கூடும், என்பதுடன் அந்த கடல் பகுதிகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாக காணப்படக்கூடும்

இந்த கடல் பகுதிகளுக்கு மறு அறிவிப்பு வரும்வரை பயணம்செய்ய வேண்டாம் ☞ 6

# இணங்கியபடி நடந்துகொண்டால் விட்டுக்கொடுப்புக்கு இடமுண்டு

## ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணிக்கு தமிழ் அரசுக் கட்சி தெளிவான பதில்

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணி தமது கட்சித்தலைமையுடன் நடத்திய பேச்சுக்களில் இணங்கியபடி நடந்துகொண்டால் விட்டுக் கொடுப்புக்களுக்கு இப்போதும் இடமுண்டு என்று தெரிவித்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

வடக்கு கிழக்கில் உள்ள சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் ஞாயிற்றுக் கிழமை தமிழ் அரசுக் கட்சியுடன் ரெலோ நடத்திய பேச்சு தொடர்பில் ரெலோ விடுத்த ஊடக அறிக்கைக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் வெறும் வாய்ச் சவடால்கள் விடவில்லை. தொடக்கத்தில் இருந்தே நீங்களும் ஏற்றுக்கொண்ட கோட்பாட்டின்படி ஒழுகவேண்டும் என்றே கேட்கிறோம். அதை விடுத்து, எம்மை வீழ்த்துவதற்காக பொய்யாக கொள்கைக் கூட்டு என்று ☞ 2

# நிதி மோசடி குற்றவாளி விடுவிப்புக்கு சிறை ஆணையரின் தவறே காரணம்

## சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவிப்பு

முன்னாள் சிறைச்சாலை ஆணையர் ஜெனரல் துஷார உபுல்தெனிய, அரசுத் தலைவர் மன்னிப்பு என்ற போர்வையில், நிதி மோசடி குற்றவாளியை சட்டவிரோதமாக விடுவிக்க தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினார் என்று சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

சிஐடியின் சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், உபுல்தெனிய, நிலையான நடைமுறைகளை மீறி, நீதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ வெசாக் மன்னிப்பு பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத கைதியான அதுல திலகரத்னவை விடுவித்தார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். விடுவிக்கப்பட்ட நபர் மே 2 ☞ 2

# குற்றங்களைத் தடுக்க வேண்டியோரே குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றனர்

## அரசுத் தலைவர் அநுரகுமார சீற்றம்

சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குற்றங்களை தடுக்க வேண்டிய பொலிஸ் சேவையில் ஒருசிலர் குற்றவாளிகளை பாதுகாக்கின்றனர். சிறைச்சாலை தலைமையகம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டுமென ☞ 6

# ஜனாதிபதி சொல்வதை முழுதாக நம்பமுடியாது கைதிகள் பொதுமன்னிப்பு பட்டியலை வெளியிடுக

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

அரசுத் தலைவர் ஊடக பிரிவு வெளியிடும் அனைத்து அறிக்கைகளும் உண்மையானது என்று நம்பிக்கை கொள்ள முடியாது. வெசாக் பண்டிகையின் போது பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிப்பதற்கு அரசுத் தலைவர்யால் அனுமதிக்கப்பட்ட 388 கைதிகளின் பெயர் விவரங்களை நீதியமைச்சர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்.பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறை நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலை கட்டமைப்பின் ஊழல் மோசடி தற்போது வெளியாகியுள்ளது. வெசாக் தினத்தன்று சட்டவிரோதமான முறையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைது ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அரசுத் தலைவர்யின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான வகையில் ☞ 6

# ரில்வின் சில்வா சீனாவில்



ஜேவிபியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வாவிற்கும், சீனாவின் ஜாஜியன் மாகாண ஆளுநரான சகோதரர் லியு ஜியாவின் சகோதரருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (09) ஜாஜியன் மாகாண ☞ 6

# பொசன் பொதுமன்னிப்பு பட்டியலை பகிரங்கப்படுத்துக

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

வெசாக் பண்டிகையை முன்னிட்டு அரசுத் தலைவர் மன்னிப்பு வழங்கப்பட்ட நபர்களின் பட்டியலை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எக்ஸ் தளப் பதிவில், வெளிப் படைத்தன்மையை உறுதியளித்த அரசுத் தலைவர், முழு பட்டியலையும் நாடாளுமன்றத்தில் வெளியிட்டு ☞ 2

# சிறைச்சாலை ஆணையாளருக்கு இன்று வரையும் விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனியவை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

முன்வைக்கப்பட்ட தரவுகளை பரிசீலித்த பின்னர் கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அரசித் தலைவரின் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அறிக்கை ஒன்று நேற்று வெளியானது. அதற்கு உடனடியாகவே தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் வழங்கிய பதில் இன்றைய முதற்பக்கத் தலைப்புச் செய்தியாக வந்திருக்கின்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து சில இணையத் தளங்களில் பல விடயங்கள் எ-ழுதப்பட்டிருந்தன. உண்மையில் என்ன நடந்தது என்று உள்ளே நுழைந்து தேடிப் பார்த்தேன். அந்தத் தளத்தில் எ-ழுதப்பட்டிருந்த வகையில் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் அங்கே மிகவும் பணிவுடன்தான்ரெலோதமதுகோரிக்கையை முன்வைத்திருந்தது. ஆனால் தமிழ் அரசுக் கட்சி தமது நிலைப்பாட்டில் திட்டவட்டமாக இருந்தது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தொடக்கத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவளிப்பதாகத்தான் சொல்லி வந்தார்தில் உங்களுக்கு சில கரிசனைகள் இருப்பதாக முதல் சந்திப்பில் சொன்னாள், ஆனால் அது குறித்த இறுதி முடிவு எமது கட்சியின் கைகளிலேயே இருக்கின்றது என்றும் தெரிவித்திருந்தாள், பின்னர் 4 சபைகளைக் கேட்டாள், அது குறித்து ஆராய்ந்து பதில் சொல்வதாகத்தெரிவித்தபின்னர்திடீரெனதமிழ் காங்கிரஸூடன்சென்றுசேர்ந்துகொண்டார்கள்.

இந்த விவரங்களைச் சுட்டிக்காட்டிய தமிழ் அரசுக் கட்சியினர், இதன் பின்னர் எமது கட்சியினரிடம் போய் ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியையும்சேர்த்துக்கொண்டு ஆட்சியமைப்போம் என்று எப்படிச் சொல்ல முடியும்? இப்படித்தான் அவர்கள் (ஜனநாயக கூட்டணி) ஒன்றைப் பேசுவார்கள், பின்னர் முதுகிலே குத்துவார்கள் என்று அவர்கள் எங்களைச் சாடுகிறார்கள் என்று தமது தரப்பு நிலமையை விளக்கினார்கள். ஜனநாயகக் கூட்டணி கேட்ட அனைத்துச் சபைகளையும் இல்லை என்றாலும் சில சபைகளையாவது அவர்களுக்கு வங்கும் நோக்கத்தோடு எமது கட்சியினரிடம் பேசி அவர்களை இணங்க வைப்பதற்குக் கடும் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோது நீங்கள் இப்படிச் செய்தால், அதன் பின்னர் அவர்களிடம் போய் உங்கள் குறித்து எப்படிப் பேச முடியும் என்று சுமந்திரன் அங்கு கேள்வி எழுப்பினார்.

அதற்கு, தாங்கள் கேட்ட சபைகளைத் தர முடியாது என்று தலைவர் சிவஞானம் தெரிவித்ததனால்தான் தமது கூட்டணி தமிழ் காங்கிரஸூடன்கூட்டைஏற்படுத்தியதாகரெலோ தரப்பில் விளக்கம் சொல்லினர். அதற்கு நடந்த பேச்சில் கோப்பாய் (வலி கிழக்கு) சபையைத் தரமுடியாது என்றே தான் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார் என்றும் அதற்கு அங்கு இரு கட்சிகளுக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருக்கின்றது என்பதே காரணம் என்றும் சிவஞானம் விளக்கினார். அது தவிர, நிபந்தனைகள் இன்றி சபைகளில் முன்னிலை பெற்ற கட்சிகளை ஆதரிக்கவேண்டும் என்பதே தனது கோரிக்கையாக இருந்ததே தவிர மற்றைய சபைகளைத் தரமுடியாது என்று தான் ஒருபோதும் சொல்லவில்லை என்றும் சிவஞானம் விளக்கினார்.

ஆக மொத்தத்தில் பகிரங்க வெளியிலும் மூடிய அறைகளுக்குள்ளும் இருதரப்பினரும் ஒரே விடயத்தைத்தான் மீண்டும் மீண்டும் பேசினர். தமது ஆதரவு இல்லாவிட்டால் தமிழ் அரசு சபைகளை இழக்கவேண்டி வரும் என்றோ, யாழ்ப்பாணத்தில் 17 சபைகளிலும் தமிழ் அரசு ஆட்சியமைக்கும் என்று அறிவித்தது ஒரு தனிமனித அறிவிப்புத்தானே தவிர அதுவொரு இனத்தின் அறிவிப்பல்ல என்றோ அங்கே ரெலோ எந்த வார்த்தைகளையும் தெரிவிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

உள்ளே பம்முவதும் வெளியே வந்ததும் வாய்க்கு வந்ததைப் பேசுவதும் சம்பந்தர் ஐயா இருந்த காலத்திலிருந்தே ரெலோவுக்குப் பக்கமானது என்பதால் இப்போது அவர்கள் வெளியே வேறு கதை பேசுவதில் ஒன்றும் ஆச்சரியம் இருக்கமுடியாது.

இதுபோக, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள்ளேயே ஒருவரை ஒருவர் வெட்டியோடுவதும் நிகழ்கிறது. ரெலோ தமிழ் அரசுடன்நடத்தியகலந்துரையாடல்களில்யாழ். மாநகர சபையில் ஈசனுக்கு துணை முதல்வர் பதவியைத்தரும்படி கேட்டுள்ளது. அதேநேரம் தொலைபேசியில் உரையாடிய சித்தார்த்தன் தனது கட்சியின் தர்சானந்துக்கு துணை முதல்வர் பதவியைக் கேட்டுள்ளார். அதற்குப் பதிலளித்த தமிழ் அரசுத் தரப்பு, யாழ். மாநகர சபையில் தமது கட்சியைத் தவிர்த்து வேறு யாருக்காவது துணை முதல்வர் பதவியைத் தருவதாகஇருந்தால்அதனைகாங்கிரஸிற்குத் தருவதே நியாயமானது, அவர்களுக்கே அங்கு 12 ஆசனங்கள் இருக்கின்றன, உங்களுக்கு வெறும் 4 ஆசனங்கள் மட்டுமே இருக்கின்றன, அப்படியிருக்கும்போது உங்களுக்கு எப்படி அதனைத் தரமுடியும் என்று விளக்கமளித்துள்ளது. அதையும் மனதில் வைத்துக்கொண்டுதான் ஓடிப்போய் தமிழ் காங்கிரஸூடன் சேர்ந்து கொண்டனர் ஜனநாயகக் கூட்டணியினர்.

இப்போதுஅந்தக்கூட்டணியில்இருப்பதால் காங்கிரஸிற்குக்கிடைக்கும்துணை முதல்வர் பதவியைத்தாம்பெற்றுக்கொள்ளலாம்என்பது அவர்கள் கணக்கு. ஆனால், தமிழ் அரசுக் கட்சி இதற்கு முரண்டுபிடிக்கப் போக இப்போது உள்ளதும் கெட்டது என்கிற நிலை. ஏனெனில் அனைத்துச் சபைகளையும் வெல்லலாம் என்பதில் தமிழ் அரசு திடமாக இருக்கின்றது. அதற்கான உள்ளடி வேலைகளை அது தெளிவாகப் பார்த்து வருகின்றது என்பது தெரிகிறது. போட்டி என்று வருகின்றபோது தமது தரப்புக்கு அதிக ஆதரவு இருப்பதை எப்படியும் உறுதிப்படுத்துவதில் அது குறியாக இருக்கின்றது. சபைகளில் என்னவேண்டுமானாலும் நடக்கலாம். தமிழ் காங்கிர- ஸை வைத்துக்கொண்டு தமிழ் அரசுக் கட்சிக்குத் தண்ணி காட்டலாம் என்று புறப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிதான் இப்போது ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சிக்கிக்கொண்டுள்ளது.

இதனால் அது கடைசியில் தஞ்சமடைந்திருக்கும் இடம் டக்ளஸ் தேவானந்தாதான். ஈபிடிபிதமிழ்அரசுக்கட்சிக்கு ஆதரவளித்தாலும், தாம் கேட்ட கோப்பாய், மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய சபைகளில் மட்-டுமாவது தமக்கு ஆதரவளிக்கும்படி அல்லது தமிழ் அரசுக்கு ஆதரவளிக்காது விலகி இருக்கும்படி இப்போது இரகசிய தூதுக்களை அவர்கள் டக்ளஸிற்கு அனுப்பி வருகிறார்கள். ஏற்கனவேஒருதடவைஅவருடன்பேசப்போய் அது தொடர்பான செய்தி வெளியாகி பெரும் களேபரமாகிவிட்ட நிலையில், இப்போது இரகசியமாக காதும் காதும் வைத்தமாதிரி காய் நகர்த்தி வருகிறார்கள்.

இப்படி இரகசியமாகப் பேசுபவர்களைவிட பகிரங்கமாகவே, மக்கள் அறியத்தக்கதாகவே தன்னைத் தேடி வந்து தமிழ் அரசு சந்தித்தது என்பதில் டக்ளஸிற்கு ஒரு சாதாகமான பார்வை இருப்பதாகவே அறியமுடிகிறது. ஆனாலும், அரசியலில் நம்பிக்கைகளுக்கும் விசுவாசத்திற்கும் இடமில்லை. எதுவானாலும் நடக்கும்போது போது பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இணங்கியபடி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்ததாகக் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இணங்கியபடி நடந்து கொண்டால் விட்டுக் கொடுப்புக்களுக்கு இப்போதும் இடமுண்டு-என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இரு கட்சிகளுக்கும் இடையிலானசந்திப்புக்குறித்துரெலோவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியத் தரப்பாக ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு பல தடவைகள்தமிழ்அரசுக்கட்சியுடன்ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எடுத்துக்கொண்ட முயற்சிகள் உதாசீனப்படுத்தப்பட்டன. இதன்பின் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கும் இடையிலான கொள்கை ரீதியான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது சாதாரணமாக ஏற்படுத்தப்படவில்லை. பலவிட்டுக்கொடுப்புகள் அரவணைப்புகளின் அடிப்படையில் தான் சாத்தியமானது.

இதன்பின் தோன்றிய அரசியல் சூழ்நிலை மாற்றங்களில் வன்னி நிலப்பரப்பில் தமிழ் தேசிய கட்சிகளின் கைகளில் சபைகளை வலுப்படுத்துகின்ற நிலைப்பாடு பற்றி பேசவே நாங்கள் அழைக்கப் பட்டோம்.

அதன் பிரகாரம் திங்கள் மதியம் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானத்தின் அலுவலகத்தில் அக்கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

அதன்போது வன்னியின் அரசியல் சூழ்நிலை பற்றி கலந்துரையாட முற்பட்டவேளையில்யாழ்ப்பாணத்தில்என்ன நடக்கிறதோ அதற்கான பதில் நடவடிக்கை வன்னியில் அமையுமென தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

உங்கள் கருத்துக்கள் பயனற்றவை. வன்னியில் அதிக சபைகளை ஆளும் தரப்பு கைப்பற்றும் நிலை காணப்படுகிறது. பல சபைகளில் தனி ஒரு கட்சியாக அவர்கள் ஆசனங்களைபெற்றுள்ளார்கள். தமிழ்தேசியப் பரப்பினர் இணைந்து செயலாற்றாதுவிட்டால் இந்தச் சபைகளை ஆளும் தரப்பிடம் இழக்க வேண்டிய சூழ்நிலை வரும்.. மேலும், கிழக்கு மாகாணத்தில் மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளை தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தோம்.

இன்னும் காலம் பிந்தவில்லை. தமிழ் தேசிய பரப்பினர் ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்போடு வடக்கு கிழக்கில் அனைத்து சபைகளையும்அமைப்பதற்கான முயற்சியை செய்ய முடியும். அதை நாங்கள் முன்னெடுக்க விரும்புகிறோம் எனவும் தெரிவித்தோம். ஆனாலும் இணக்கமான சூழ்நிலைக்கு பதிலாக வறட்டு சவடால்களே பதிலாகின.

தனிமனித வீர வசனங்களால் எமது இனத்தினை நேர்த்தியான பாதையில் வழி நடத்த முடியாது. மக்கள் வழங்கிய ஆணையைஏற்றுதமிழ்த்தேசியப்பரப்பினர் ஒன்றுகூடி ஆட்சியை கைப்பற்றுவதே மக்கள் எதிர்பார்ப்பு. அதை செய்வதற்கு விட்டுக்கொடுப்பு, அரவணைப்பு என்பன மிக அவசியம். தலைமைகளின் வறட்டு கௌரவம் இதற்குத் தடையாக இருக்கக் கூடாது.

எப்பொழுதும் ஒற்றுமைக்காகவே ரெலோ பாடுபட்டு வந்துள்ளது. அதில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் நாங்கள். அதைத் தவறாகப் புரிந்துகொண்டு வீர வசனங்கள் பேசுவதில் அர்த்தம் இல்லை. வெட்டிச்சவடால்களுக்குநாங்கள்ஒருபொழுதும் இடமளியோம்

## மன்னாரில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்தொடர்ச்சியாகஎதிர்ப்பைதெரிவித்து வருகின்ற போதும்,குறித்த நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

எனவே மக்களின் வாழ்வியலை பாதிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள் ,மீனவ அமைப்புகள் உள்ளடங்களாக சிவில் அமைப்புக்கள் இணைந்து மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடையும்.

அதனை தொடர்ந்து அரசுத் தலைவர்க்கு கையளிக்கப்பட வேண்டிய கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கி வைக்கப்படும்.

எனவே குறித்த பேரணியில் மன்னார் மாவட்ட மக்கள்,வர்த்தகர்கள் உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது இருப்பை தக்க வைக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிதி மோசடி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்று அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால் 12ஆம் திகதியே அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

உபுல்தெனியவின் நடவடிக்கைகள் நீதித்துறை செயல்முறை மற்றும் அரசுத் தலைவர் மன்னிப்பு நெறிமுறையை குறைமதிப்பிற்குஉட்படுத்துவதாகபீரிஸ்மேலும் குற்றம் சாட்டினார். 'இந்த அதிகாரிகள் தங்கள் நிறுவனங்களைதனியார்பேரரசுகளைப்போல இயக்கி வருகின்றனர்,' என்று அவர் கூறினார், கிறிஸ்துமஸ் மற்றும் சுதந்திர தினத்தின்போது சட்டத்தை மீறி இதேபோன்றும் நடந்துள்ளன என்று கடந்த கால விடுவிப்புக்களையும் எடுத்துக்காட்டினார்.

முதற்கட்ட விசாரணைகள் 2024 டிசம்பரில் 57 கைதிகளும், 2025 சுதந்திர தினத்தன்று மேலும் 11 கைதிகளும் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டனர் என்று தெரிகின்றன என்றும் அவர் மேலும் கூறினார். மூத்த சிறை அதிகாரிகளால் சட்டவிரோதமாக சொத்து குவிக்கப்பட்டதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய சட்டமா அதிபர் துறை இப்போது விசாரணையை விரிவுபடுத்தியுள்ளது.

## சிறைச்சாலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலைசெய்யப்பட்டபோது அனுமதியற்ற முறையில் சிலரை விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

## பொசன்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்முறையைதணிக்கைசெய்யவேண்டும் என்று சஜித் தெரிவித்தார்.

'388 வெசாக் மன்னிப்புகள் நீக்கப்பட்டன; ஆனால் பட்டியலில் இல்லாத ஒரு மோசடி செய்பவர்வெளிநடப்புசெய்தார். வெளிப்படைத் தன்மையை உறுதியளித்த அரசுத் தலைவர், உத்தரவில் கையெழுத்திட்டார், எனவே வெளிப்படைத்தன்மை மற்றும் அமைப்பு மாற்றத்தின் நலன்களுக்காக, அரசுத்தலைவர் பணத்தை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், முழு பட்டியலையும் நாடாளுமன்றத்தில் வெளியிட்டு செயல்முறையை தணிக்கை செய்யவேண்டும்' என்று சஜித் தெரிவித்தார்.

2025 வெசாக் தின அரசுத் தலைவர் மன்னிப்பின் கீழ் அனுராதபுரம் சிறையில் இருந்து தண்டனை பெற்ற வங்கியாளர் அதுல திலகரத்ன விடுவிக்கப்பட்டது அங்கீகரிக்கப்படாததுஎன்றுகண்டறியப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் வந்துள்ளன.

அரசுத் தலைவர்யால் மன்னிப்பு வழங்கப்பட்ட 388 கைதிகளின் அதிகாரப்பூர்வ பட்டியலில் திலகரத்னவின் பெயர் இல்லை என்றும், நீதிமன்ற ஆவணங்கள் அதை ஆதரிக்கவில்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்படாத விடுதலையானது அனுராதபுரம் சிறைச்சாலையின் துணை ஆணையரைசிஐடிகைதுசெய்யவழிவகுத்தது. அவர் இன்னும் தடுப்புக் காவலில் உள்ளார்.

இதற்கிடையில்,நேற்றையஅமைச்சரவைக் கூட்டத்தின் போது, சிறைச்சாலைத் தலைவரை கட்டாய விடுப்பில் அனுப்பவும், முதற்கட்ட விசாரணையைத் தொடங்கவும், கண்டுபிடிப்புகளின்அடிப்படையில்ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

## ரில்வின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான பொதுமக்களின் வேலைவாய்ப்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சீனகம்யூனிஸ்ட்கட்சியின்அழைப்பின்படி, மக்கள்விடுதலைமுன்னணியின்தலைமைச் செயலாளர் டில்வின் சில்வா இந்'த விஜயத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த சீனா மற்றும் ஜாஜியன் மாகாணத்தின் முன்னோக்கிய பங்களிப்பு குறித்தும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து மக்கள் விடுதலை முன்னணியின் முன்முயற்சியுடன் நிறுவப்பட்ட தேசிய மக்கள் படை அரசாங்கம்இ நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் திட்டத்துடன் நகர்ந்து வருவதாகவும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைச் செயலாளர் டில்வின் சில்வா இங்கு வலியுறுத்தினார். சீனாவிற்கான தற்போதைய பயணத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனுபவம் , சீனா மற்றும் ஜாஜியன் மாகாணத்தின் ஆதரவு எதிர்பார்க்கப்படுவதாகவும் எனவும் ரில்வில் சில்வா இங்கு வலியுறுத்தினார்.

இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, பிரதி அமைச்சர் முனீர் முலபர், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற அமைச்சர் ஏ. ஜெகதீஸ்வரன், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மபிரியா விஜேசிங்க, ஜாஜியன் மாகாண துணை ஆளுநர் லு ஷான், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசப் பிரிவின் தெற்காசிய பிராந்திய கண்காணிப்பாளர் ஜெனரல் பான் சியு பின் மற்றும் ஜாஜியன் மாகாணம் பிரதிநிதிகளும்,. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்துக்கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பிலிருந்து சென்ற கப்பலில் திடீர் தீவிபத்து



## நால்வரைக் காணோம்

சிங்கப்பூர் கொடியுடன் கூடிய சரக்குக் கப்பலான வான் ஹை 503 இந்தியாவின் கேரள மாநிலக் கடற்கரையிலிருந்து 88 கடல் மைல் தொலைவில் வெடித்ததில் ஏற்பட்ட தீயை அணைக்க இந்திய கடலோர காவல்படை போராடி வருகின்றது. கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற கப்பலிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்துக்குப் பிறகு காணாமல் போன நான்கு பணியாளர்கள் குறித்து எந்த தகவலும் இல்லை.

தீ விபத்துக்குப் பிறகு பல கொள்கலன்கள் கடலில் விழுந்ததாகவும் இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

தீ விரைவாக அணைக்கப்படாவிட்டால், கப்பல் மூழ்க அதிக வாய்ப்பு இருப்பதாகவும் இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

தீ விபத்து ஏற்பட்டபோது, இலங்கையின் கொழும்பிலிருந்து இந்தியாவின் மும்பைக்கு சரக்குக் கப்பல் வான் ஹை 503 பயணித்துக் கொண்டிருந்தது.

விபத்துக்குள்ளான கப்பலில் இருந்து பதினெட்டு பணியாளர்கள் மீட்கப்பட்டனர், ஆனால் ஒரு கொள்கலன் வெடித்ததில் நான்கு பேர் காணாமல் போயினர் என்று இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. காணாமல்போன நான்கு பேரில் இருவர் தைவான் நாட்டைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் மியான்மர் மற்றும் இந்தோனேசியர்கள் என்று இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.




சரக்குக் கப்பலில் பல்வேறு அளவிலான ஆபத்தான 157 கொள்கலன்கள் இருந்ததாக இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. கொள்கலன்களில் பிசின் கரைசல், நைட்ரோசெல்லுலோஸ், டயசெட்டோன் ஆல்கஹால், பெயிண்ட், ஹைட்ரோகார்பன்கள், டர்பெண்டைன், நாப்தலீன் மற்றும் ஆர்கனோமெட்டாலிக் பொருட்கள் இருந்தன, மேலும் கப்பலில் வெடிப்புகள் ஏற்பட்டதாக இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.




# மோ. சைக்கிள் திருடும் 8 பேர் கும்பல் சிக்கியது

கொழும்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைத் திருடும் எட்டு பேர் கொண்ட கும்பலை மஹரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

8 முச்சக்கர வண்டிகள் மற்றும் 5 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஒரு மோட்டார் சைக்கிள் என்பனவும் சந்தேகநபர்களுடன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவர் போதைப்பொருளுடன் சுற்றித் திரிவதாக கிடைத்த தகவலின் பேரில் மஹரகம நகர மையத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்த 72 மணி நேர தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டது. நடத்தப்பட்ட நீண்ட விசாரணையின் போது இந்த முச்சக்கர வண்டி திருட்டு கும்பலுக்கான மூல காரணத்தைக் கண்டறிய முடிந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரதான சந்தேகநபர் தற்காலிகமாக வசித்து வரும் வீட்டில் மேற்கொண்ட சோதனையின்போது இந்த முச்சக்கர வண்டி திருட்டு கும்பலுக்கான ஆதாரங்களைக் கண்டறிய முடிந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மோட்டார் சைக்கிள் மட்டுமன்றி முச்சக்கர வண்டிகளும் இந்தக் கும்பலால் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சுயேச்சை உறுப்பினர்கள் கொழும்பு நேற்று பதவியேற்பு

சுயேச்சைக் குழு நான்கு சார்பாக கொழும்பு மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட கே.ரீ,குருசாமி, பழ. புஸ்பநாதன் ஆகியோர் பதவியேற்றனர்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் மற்றும் பம்பலப்பிட்டி இந்து கல்லூரியின் முன்னாள் அதிபர் த. முத்துகுமாரசாமி (அகில இலங்கை சமாதான நீதவான்) ஆகியோர் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகரிக்கும் செற்கைநுண்ணறிவு வன்முறை

சமீபத்திய செய்திக்குச் இணங்காக, 2025 ஆனி 10 அன்று ஹொரண நீதிமன்றம், செயற்கை நுண்ணறிவு (AI) முறையில் உருவாக்கப்பட்ட நிர்வாண மற்றும் ஆபாசப் (explicit) படங்களை பயன்படுத்தி பாடசாலை மாணவிகள் முகங்களை மாற்றி புலனம் (வாட்ஸ்அப்) மூலம் பகிர்ந்த இரண்டுமாணவர்களைசிறுவர்நன்னடத்தைஇல்லங்களில் (juvenile reformatory) வைத்திருக்கும்படி உத்தரவு இட்டுள்ளது.

சந்தேகநபர்கள் உருவாக்கிய குற்றவியல் படங்களை பகிர்ந்த பாடசாலை மாணவர்கள் சாதாரண தரத்தில் கற்கும் மாணவிகள் நால்வரின் படங்களையே வன்முறைக்குள்ளாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம், இலங்கை போன்ற ஒரு கல்வியறிவு உச்சத்திலிருக்கும் சமூகம் தீவிரமாக அக்கறை செலுத்த வேண்டிய அறிகுறியாகும். மாணவிகள், குறிப்பாக இளம் பெண்கள், "deepfake nude" போலியான மற்றும் தவறான நிர்வாண படங்களுக்கு இலக்காகப் படுகின்றனர்; இதனால் தர்க்கபூர்வமான போதை, தனிமை, புகழ் பாதிப்பு போன்ற பல சிக்கல்கள் தோன்றுகின்றன .

உலகளாவிய அளவில் இதுபோன்று பாதிப்புகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல இடங்களில் தெளிவாக உணரப்பட்டு வருகின்றன: அமெரிக்காவின் பல பாடசாலைகளிலும், ஆஸ்திரேலிய ஆசிரியர்களையும் மாணவர்களையும் இலக்கு வைத்து இத்தகைய deepfake சம்பவங்கள் அதிகரித்து உள்ளன . அந்த உருமாற்றங்கள் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

கல்வி நிலையங்களின் கட்டாய செயற்பாடுகள் – பாடசாலைகள் சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவின் தவறான பயன்பாடுகள் (AI misuse) குறித்த கட்டாய பாடநெறிகள் (workshops) நடத்த வேண்டும். நிர்வாண deepfake விளைவுகள், குறுகிய விளக்கங்கள், மாணவ– மாணவிகளுக்கான உரிமைகள் மற்றும் சட்ட விளக்கங்கள் வழங்கும் வகையில் அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

தனித்துவமான ஆதரவு அமைப்புகள் – பாடசாலை மாணவிகளின் தந்தையர், பெற்றோர்கள், மற்றும் கல்வி செயலாளர்கள் ஆகியோர் இணையக் குற்றக் களைவு, பாதுகாப்புக் குழுக்களை (cyber safe task force) அமைக்கவேண்டும். குறிப்பாக deepfake, revenge porn போன்ற புதிய வகை குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு அறிவித்தல் முக்கியம்.

இத்தகைய deepfake நிர்வாணங்கள் "child sexual exploitation" அல்லது "child abuse material (CSAM)" என்ற வகையில் மட்டும் பார்க்கப்படக்கூடாது. காரணம் தொடுப்பற்ற AI image sharing குற்றங்கள் பெரும்பாலும் இதே பிரிவில் உள்ளன. அதனாலேயே, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்கவும், இளைஞர்களை குற்றவியல் சட்டத்துக்கு உட்படுத்தாமல் விடவும் அதிக வாய்ப்புக்கள் இங்கு உருவாகுகின்றன. கலந்துரையாடல் மையப் பண்பட்ட ஷளவிமிலிஷழிமிஷ்ஸள ளூற்விமிஷ்உள நடைமுறை இதற்காகக் கொண்டுவரப்படவேண்டும்.

பெற்றோர் – மன உறவுகளை வலுப்படுத்தவும்; போட்டோ பகிர்வில் கண்காணிப்பு, உரிமை தொழில் பற்றி பேச வேண்டும்.

deepfake வன்முறைகளை "வேடிக்கை" கற்பனையாகக் கொள்ளக்கூடாது; இது காவல்துறை மற்றும் நீதிமன்றத்தில் இலக்காக்கொள்ளப்பட்ட சிறு வயதாகும் குற்றமல்ல – இது மாணவிகள் எதிர்காலத்தை உருமாற்றத்தக்க பெரும் குற்றம். மனக் கோளாறுகளை உண்டாக்கும் மிகப்பெரிய சமூக அச்சுறுத்தல். AI misuse என்ற குற்றத்தை எதிர்நோக்கி கல்வி, சட்டம், சமூக சக்தி மூன்றாலும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்தால்தான் மாணவிகளின் எதிர்காலம் சிறந்ததாக இருக்க முடியும்.

# மாணவிகளின் படத்தை மார்பிங் செய்து நிர்வாணமாக வெளியிட்ட 3 பேர் கைது

சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகும் நான்கு பள்ளி மாணவிகளின் முகத்தில் நிர்வாண உடல்களை செயற்கை நுண்ணறிவு (புணு) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒட்டவைத்து, அவற்றை பள்ளியின் வாட்ஸ்அப் குழுக்களில் பரப்பியதாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களை இந்த மாதம் 13 ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்க ஹொரணை நீதிவான் சந்தன கலன்சூரிய இன்று உத்தரவிட்டார்.

மேலும், இரண்டு மாணவர்களையும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டில் உள்ள குழந்தைகள் தடுப்பு மையத்திற்கு அனுப்புமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமிகளில் ஒருவரின் தந்தை இந்த புகைப்படங்களைப் பார்த்து, அது குறித்து பொலிஸாரிடம் புகார் அளித்ததை அடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

# குறைந்தபட்ச ஊதிய சட்டதிருத்த பிரேரணை ஜூன் 20 வருகிறது

தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டப் (திருத்த) பிரேரணை மற்றும் ஊழியர்களுக்கான வரவு செலவுத் திட்ட இரு நிவாரணக் கொடுப்பனவுகள் (திருத்த) பிரேரணை (எண். 4/2016 மற்றும் எண். 36/2005) ஆகியவை ஜூன் 20 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ளன.

இந்தத் திருத்தங்கள் நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு பல நன்மைகளைத் தரும் என்று ஆளும்தரப்பு தெரிவிக்கின்றது.

நாடாளுமன்ற விவகாரக் குழு, நாடாளுமன்றத்தை 17 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை கூட்ட முடிவு செய்துள்ளது.

# பிரதேச சபை முன்னாள் தலைவர் கல்பிட்டியில் பொலிஸாரால் கைது

கல்பிட்டி பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் பொது மேலாளரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் தலைவர் பதவியை எதிர்பார்த்திருந்தார். அவர் தற்போது தேசிய மக்கள் சக்தியின் கீழ் கல்பிட்டி பிரதேச சபையில் போட்டியிடும் ஒரு உள்ளூர் அரசியல்வாதி ஆவார்.

கல்பிட்டி பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான காணியை குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தி, குத்தகை நிபந்தனைகளை மீறி பல ஆண்டுகளாக அந்த நிலத்தில் ஒரு பெரிய கட்டடத்தை பராமரித்து வந்த நபர் தொடர்பான வழக்கை விசாரிக்க நுரைச்சோலை காவல் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு காவல்துறை அதிகாரிகள் நேற்று சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்றதை அடுத்து இந்த கைது மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் தலைவர் கல்பிட்டி பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் பொது மேலாளர் இருந்த இடத்திற்குள் நுழைந்து, அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்து, அவரை அந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தினார்.

# கலால் திணைக்கள அதிகாரிகள் உட்பட மூவர் மீரிகமவில் கைது

## பீடி இலைகளை கடத்திய குற்றச்சாட்டில்



இந்தியாவில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 1 பில்லியன் ரூபாய் மதிப்புள்ள 1,200 கிலோ பீடி இலைகளை கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு அளித்ததாகக் கூறப்படும் கலால் திணைக்கள அதிகாரிகள் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டதாக மேற்கு வடக்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

பீடி இலைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி சாரதி, மீரிகம பகுதியில் உள்ள கலால் அலுவலகத்தில் பணிபுரியும் கலால் ஆய்வாளர் மற்றும் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பீடி இலை பாரவூர்திக்குப் பாதுகாப்பு அளிக்க கலால் அதிகாரிகள் பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir






## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்பட்டுள்ளதை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தேன்.அதுவரையில் அரசாங்கம் எவ்விதநடவடிக்கைகளையும்எடுக்கவில்லை.

சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் விவகாரத்தில் சிறைச்சாலை தலைமையகம், நீதியமைச்சு , அரசுத் தலைவர்செயலகம்ஆகியஅரசநிறுவனங்கள் தொடர்புடையது. பொதுமன்னிப்பு பெற்றுக்கொள்வதற்குததகுதியுள்ளகைதிகளின் பெயர் விபரங்களை சிறைச்சாலை தலைமையகம் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கும்.நீதியமைச்சால்அந்தபெயர்பட்டியல் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் அரசுத் தலைவர் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

அரசுத் தலைவர் செயலத்தால் இறுதிப்படுத்தப்பட்ட வகையில் அனுப்பி வைக்கப்படும் பெயர் பட்டியலுக்கு அமைவாகவேசிறைச்சாலைதலைமையகம் பொதுமன்னிப்புவழங்கலைசெயற்படுத்தும். இவ்வாறான நிலையில் கடந்த வெசாக் தினத்தன்று சட்டவிரோதமான முறையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டதாக செய்தி வெளியாகியது.

பொது மன்னிப்பு வழங்கல் விவகாரத்தில் எவ்வித முறைகேடும் இடம்பெறவில்லை. சட்டத்தின் பிரகாரமே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்று சிறைச்சாலை தலைமையகம் கடந்த வாரம் ஊடக அறிக்கையை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்துகடந்தசனிக்கிழமைஅரசுத்தலைவர் செயலகமும், பொலிஸ் திணைக்களமும் அரசுத் தலைவர் பொது மன்னிப்பில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த மூன்று அரச நிறுவனங்களும் பரஸ்பரமான முறையில் அறிக்கை வெளியிடுகின்றன. எந்த நிறுவனம் குறிப்பிடுவதை ஏற்பது.அரசுத் தலைவர் செயலகம் வெளியிடும் சகல அறிக்கைகளையும் உண்மை என்று நம்ப முடியாது.

பொதுமன்னிப்புவழங்குவதற்காக அரசுத் தலைவர் செயலகத்தால் இறுதிப்படுத்தப்பட்ட 388 கைதிகளின் பெயர் விபரங்களை நீதியமைச்சர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். கடந்த அரசாங்கத்தின் காலத்திலும் இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்த முறைகேட்டை நியாயப்படுத்த முயற்சிப்பதை ஆளும் தரப்பு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## கடும் காற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என கடற்சார் மற்றும் மீனவ சமூகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும்,இதுதொடர்பாகவளிமண்டலவியல் திணைக்களத்தால்வெளியிடப்படும்அடுத்தடுத்த அறிவிப்புகளை கவனமாக பின்பற்றுமாறு மீனவ மற்றும் கடற்சார் சமூகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## குற்றங்களைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம்-மிஹிந்தலைவிகாரையில் நேற்றுசெவ்வாய்க்கிழமைநடைபெற்றதேசிய பொசன் உற்சவத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைதேசத்தைநாகரிகமாற்றத்திற்கு இட்டுச் சென்ற மகிந்த தேரரின் வருகை மற்றும்மிஹிந்தலையைமறந்துவிட்டுதேசிய பொசொன் நிகழ்வை கொண்டாட முடியாது.எனவே, இவ்வாறான ஆன்மீக விழுமியங்களைக் கொண்ட நிலத்தைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பது ஒரு அரசின் பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பை பூமியுடன் உணர்வுபூர்வமான தொடர்புடைய பிரஜைகளால் மாத்திரமே நிறைவேற்ற முடியும். அநுராதபுர நகரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.மஹிந்த தேரரின் இலங்கை வருகையுடன்நமது நாடு தேரவாத பௌத்த தத்துவம் மற்றும் பாரம்பரியத்தின் மையமாக மாறியது. சமூக மாற்றத்திற்கும் ஆன்மீக விழிப்புணர்வுக்கும் வழிவகுத்த இந்த அற்புதமான நிகழ்வு, வெறும் மத அர்த்தத்தைத் தாண்டி, கலாசாரம், சமூகம் மற்றும் அரசியல் உட்பட நமது நாட்டின் அனைத்து அம்சங்களிலும் மிகவும் மேம்பட்ட கட்டமைப்பை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையின் முதல் நகரம், முதல் குளம், முதல் அறுவை சிகிச்சைத் தளம் மற்றும் யோதகால்வாய் போன்ற பாரம்பரியங்களைக் கொண்ட அநுராதபுரத்தை அதன் பண்டைய பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.இந்திய உதவியின் கீழ் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இந்தியப் பிரதமர் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த தேசமும் நிலைத்து நிற்க வலுவான அடித்தளம் தேவை. புத்தரின் தத்துவத்தின் மூலம் இலங்கை மக்கள் அத்தகைய வலுவான அடித்தளத்தைப் பெற்றுள்ளனர். கல்வியில் பின்னடைந்த சமுதாயத்தில் வலிமையான பிரஜைகளை எதிர்பார்க்க முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தம் இந்நாட்டில் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தியது. விகாரைகளைப் பிரிவெனாக்களாக மாற்றுவதன் மூலம், இந்நாட்டு மக்களுக்கு ஆன்மீகத்தையும் அறிவையும் வழங்கும் சமூக நோக்கத்தை நிறைவேற்றுவதில் பௌத்தம் பெரும் பங்காற்றியது. இது ஒரு நாகரீக சமூக பொறிமுறையின்தோற்றத்திற்குவழிவகுத்தது. அதற்காக 2500 ஆண்டுகால வரலாற்றில் இந்நாட்டில் செயற்பட்ட தேரர்கள் அனைவருக்கும் நாம் நன்றியுடன் இருக்க வேண்டும்.

சமூகம் மற்றும் சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.குற்றங்களை தடுக்க வேண்டிய பொலிஸ் சேவையில் ஒருசிலர் குற்றவாளிகளை பாதுக்கின்றனர்.இதுவே உண்மை. சட்டவிரோதமான வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகத்தை தடுப்பது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால் அந்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பாதாளக்குழுக்களின் தலைவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு கடவுச்சல்ட்டு வழங்கியுள்ளது. நிறுவனத்தின் பொறுப்பு மீறப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகளுக்கு தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவது சிறைச்சாலை தலைமையகத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால் அந்த திணைக்களம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது.மோட்டார் வாகனத்தின் செயற்பாடுகள்குறிப்பிடுவதற்கொன்றுமில்லை. மக்களுக்கு சேவையாற்றும் அனைத்து நிறுவனங்களிலும் பிரச்சினைகள் காணப்படுகிறது.

வீழ்ச்சியடைந்துள்ள நிறுவன கட்டமைப்பை முதலில் மறுசீரமைக்க வேண்டும்.சமூக கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சமூகம் மற்றும் சமூக கட்டமைப்பிலான நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.வரலாற்று சிறப்புக்களை மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருந்தால் சமூகம் என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. சமூக கட்டமைப்பில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவற்றைமுறையாகஅமுல்படுத்த வேண்டும்.

பழக்கத்தால்அடிமையானஒருவிடயத்தை சட்டங்களால் மாத்திரம் மாற்றியமைக்க வேண்டும். செயற்பாடுகள்மற்றும்அடிப்படை விடயங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஆகவே சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டும் என நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## 3 நாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பிற பிரமுகர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மாற்றம், கிடைக்கக்கூடியமுதலீட்டுவாய்ப்புகள்,நாட்டின் வளர்ச்சி திறன் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்த, ஜேர்மனியில்உள்ளமுக்கியதொழில்களுடன், ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை ஏற்பாடு செய்யும் வணிக மன்றத்திற்கு அரசுத் தலைவர் திசாநாயக்க தலைமை தாங்குவார்.மேலும், இந்த பயணத்தின் போது அரசுத் தலைவர் ஜேர்மனியின் சுற்றுலா மற்றும் பயணத் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளும் அரசுத் தலைவர்யுடன் இந்த பயணத்தில் கலந்துக் கொள்வார்கள்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City






## உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

**0777 43 55 57**



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE

இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA






5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!